கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.269/2020

பி.வா.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **பிச்சையம்மாள்** | தொழில் | |
| த/க பெயர் | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 30.06.2025 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் **2 முதல் 5** பிரதிவாதிகள் தரப்பு சாட்சி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தை என் முதல் நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லியது என்றால் சரிதான். எனது ஆதார் அட்டை நகல் என்னிடம் உள்ளது. தற்போது எனக்கு 70 வயது என்றால் சரிதான். நான் 1970 ஆம் வருடத்தில் பிறந்திருப்பேன் என்றால் பிறந்த வருடம் தெரியவில்லை. தர்மராஜா என்பவர் கிரையம் பெற்ற பத்திரத்தில் தர்மராஜின் தகப்பனார் பெயர் தான் உள்ளது என்றால் சரிதான். 1975 ஆம் ஆண்டுவாக்கில் நான் மைனராக இருந்தேன் என்றால் சரிதான். நான் மைனர் என்பதால் பத்திரத்தில் உள்ள விபரங்களை யார் சொல்லி யார் எழுதியது, யார் பணம் கொடுத்து யார் பணம் வாங்கியது, யார் சாட்சி கையொம் செய்தது என்ற விபரம் தெரியாது என்றால் சரியல்ல. 1975 ஆம் ஆண்டு பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்ய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான்.

மேற்படி சொத்தில் 1ஆம் பிரதிவாதி ஞானபிரகாசம் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, தர்மராஜாவிற்கு பிறகு அவரின் மகள் விவசாயம் செய்து வருகிறார். 1ஆம் பிரதிவாதி ஞானபிரகாசம் விவசாயம் செய்து வருகிறார்கள், 2 முதல் 5ஆம் பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தில் கடனாக பெற்றுக்கொண்டு என்ற வாசகம் உள்ளது அதில் என்ன பத்திரம் வைத்தார்கள் யார் யார் மாற்றி, பணம் எவ்வளவு மாற்றிக் கொண்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. எவ்வளவு வட்டி கட்டி வந்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. மறுபடியும் சாட்சி மாற்றி நேரடியாக தெரியும் என்று சாட்சியம் அளிக்கிறார். நான் பாலக்கிருஷ்ணபுரம் ஏ.வெள்ளோடு என்று சொல்லியுள்ளேன். ஆனால் நான் சிறுமலையில் குடியிருந்து வருகிறேன். அதற்கான முகவரி ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆனால் சிறுமலையில் வீடு கட்டி கிஸ்தி ரசீது கட்டி குடியிருந்து வருகிறேன். 1ஆம் பிரதிவாதி ஞானபிரகாசம் என்பவர் தர்மராஜாவிற்கு வாய்காராலக விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்த விபரம் தெரியாது என்றால் சரிதான். தர்மராஜா பேரில் உள்ள வருவாய் துறை ஆவணங்கள் பற்றி எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் விவசாயம் செய்து வருவது மட்டும் எனக்கு தெரியும். வாதி ஆரோக்கியமேரிக்கும், 1ஆம் பிரதிவாதி ஞானபிரகாசம் என்பவருக்கும் தாவா சொத்தில் எவ்வித உரிமை இல்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 முதல் 5ஆம் பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.06.30 19:10:13 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.